# பல்கலைக்கழகமா? காவல் நிலையமா?

# பற்றியெரியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# பல்கலைக்கழகத்திற்குள் அரச பயங்கரவாதம்

# தென் கிழக்குப் பல்கலைக்கழகம் : ஆக்கிரமிக்கப்படும் கல்வியின் பூமி

## அன்பார்ந்த பெற்றோர்களே, மாணவ மாணவிகளே, பொதுமக்களே!

எமது சமூகத்தினதும் இப்பிரதேசத்தினதும் மிகப் பெரிய கல்விச் சொத்துக்களுள் மிக முக்கியமான உயர்கல்வி நிறுவனம் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்பதை நீங்கள் அறிவீர்கள். கடந்த காலங்களில் ஏற்பட்ட இதன் பெருவளர்ச்சி குறித்தும், அபிவிருத்தி குறித்தும் நாமெல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எமக்கான அரசியல் நிலைப்பாட்டிலிருந்து சமூக அக்கறை வரையிலான எல்லா நிகழ்வுகளிலும் இப்பல்கலைக் கழகம் ஆற்றிய பணி மகத்தானது. இப்பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றுச் சென்ற மாணவர்கள் அனைவரும் சமூகம் போற்றக்கூடிய உயர் பதவிகளில் இருந்துகொண்டு இதற்கு பெருமை தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். நாடளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம் புத்திஜீவிகளை ஒன்றிணைக்கும் கேந்திர ஸ்தலமாகவும், நமது தனித்துவத்தின் குரலாகவுமே எப்போதும் நாம் இப்பல்கலைக் கழகத்தை நேசித்து வந்துள்ளோம். இன்று இப்பல்கலைக்கழகம் அரச படைகளால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. 60ற்கும் மேற்பட்ட பொலிஸார், இராணுவத்தினர் பல்கலைக்கழகத்தின் எல்லைக்குள் குவிக்கப்பட்டுள்ளனர். 07ற்கும் அதிகமான காவல் அரண்கள் பல்கலைக்கழகத்தின் முக்கிய இடங்களில் புதிதாய் அமைக்கப்பட்டுள்ளன. யுத்த பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற ஆமிக்கள் (Army) பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். குறிப்பாகச் சொல்லப்போனால் இரு 'அட்டாளைகள்' (உயரமான பாதுகாப்புப் பரண்) அமைக்கப்பட்டு பாதுகாப்புப் பணி என்ற கோதாவில் நமது பல்கலைக் கழகம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு 'அட்டாளை' முஸ்லிம் பெண்களின் ஹொஸ்டலை ஒட்டியபடி அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்திற்குள் நுழைகின்ற விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்பட அங்கு வருகை தருவோர் அனைவரும் பிரத்தியேக மூன்று இடங்களில் சோதனைக் குட்படுத்தப்படுகின்றனர். சாதாரண பிரயாணிகள் கூட பயணங்களில் ஒரு கிலோ மீற்றருக்குள் இவ்வாறு சோதனைக்குட் படுத்தப்படுவதில்லை. மிகச் சுதந்திரமான இடம் என்று அறியப்படும் கல்வி நிலையமான பல்கலைக்கழகம் காக்கி, இராணுவ உடைகளால் நிறைந்து யுத்தப்பாடசாலை போல காட்சியளிக்கிறது. புத்திஜீவிகள் சமூகமும், உயர் கல்வி நிறுவனமான பல்கலைக்கழகமும் மெல்ல மெல்ல மனநோயாளர்களின் கூடாரமாக மாறிக்கொண்டு வருவது நமக்கெல்லாம் மிகப் பெரிய ஆபத்தாகும்.

இவற்றிற்கான பின்னணி குறித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு கிடைக்கும் பதில்கள் எம்மை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றன. இதற்குச் சொல்லப்படும் பிரதான காரணங்களாக,

1. கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஒரு சிங்கள மாணவர் சுடப்பட்டமை.
2. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட 200 சிங்கள மாணவர்களின் பாதுகாப்பு போன்றவையாகும்.

முதலாவது காரணத்தை நோக்கும்போது, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்காக 100 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு பாதுகாப்பு வழங்குவது கேலிக்கூத்தாகும். அவ்வாறான ஒரு நிலைப்பாடு எமது பல்கலைக்கழகத்தில் ஏற்பட வாய்ப்பேதுமில்லை. ஏற்கனவே பயிற்சி பெற்ற பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவினர் இருக்கின்ற தருணத்தில் மேலதிகமாக கொண்டு குவிக்கப்பட்ட பொலிஸ், ஆமியின் வரவு பல உள்நோக்கங்கள் நிரம்பியதாகும் என்பதினை நாம் வெளிப்படையாக அறிவோம்.

இரண்டாவது, என்றுமில்லாதவாறு திடீரென அனுமதிக்கப்பட்டுள்ள 200ற்கும் மேற்பட்ட சிங்கள மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இப்படைகள் குவிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்றது. நாட்டில் உள்ள ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் மாணவர்களின் பாதுகாப்பிற்காக இதுவரை எந்தப் படைகுவிப்பும் இடம்பெறவில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆக இவ்விரண்டு காரணங்களும் வெறும் நொண்டிச் சாட்டுகளாக இருக்கின்ற நிலையில், மாணவர்களின் விடுமுறையை கவனத்தில் கொண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அரச படைகளால் பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இப்படைகுவிப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளின் போது இடம் பெற்றிருக்குமானால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் எனக்கருதியே இந்நிகழ்ச்சி அரங்கேற்றப் பட்டுள்ளது.

இது குறித்து வெளிப்படையான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பல்கலைக்கழக உபவேந்தரும், பதில் பதிவாளரும் தயக்கம் காட்டுகின்ற நிலையில், முன்பின் முரணான கருத்துக்களையே அவர்கள் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனர். பல்கலைக்கழக மாணவரொருவர் இது பற்றிக் கூறுகையில் "பாதுகாப்பு அரண்களில் இப்போது இருக்கும் மண் மூட்டைகளுக்குப் பதிலாக இராணுவத்தினர் கொங்கிறீட்டைக் கொட்டி நிலையாக குடியேறுமுன் எங்களை வந்து காப்பாற்றுங்கள்" என்று சொல்கிறார்.

புதிதாகச் சேர்க்கப்பட்ட சிங்கள மாணவர்கள் தாங்கள் வருகை தந்த இரண்டாவது நாளே பல்கலைக்கழகத்தில் "பன்சலை" ஒன்றைக் கட்டுவதற்கான அனுமதி கோரியிருந்ததாகவும் அதனை செயற்படுத்தும் பின்னணியிலேயே இப்படைகுவிப்பு இடம்பெற்றிருப்பதாகவும் பல செய்திகள் உலவுகின்றன. உயர் மதச் சுதந்திரம் எழுத்தில் உள்ள இலங்கை போன்ற நாட்டில் பன்சலையொன்றை பல்கலைக்கழகத்தில் கட்டுவது பிரச்சினையான விடயமல்ல. ஆனால் அது ஒரு தேசிய திட்டமாகக் கொண்டுவரப்பட்டு நாட்டில் உள்ள எல்லாப் தேசியப் பல்கலைக்கழகங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ மாணவர்களுக்காக அவர்களது மதஸ்தலங்களும் கட்டப்படவேண்டும். இதுவல்லாமல் முஸ்லிம் மாணவர்கள் சிறுபான்மையாகக் கல்வி கற்கின்ற குண்டகசாலை விவசாயக் கல்லூரி, மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி போன்றவற்றில் வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்கான அனுமதி கூட மறுக்கப்படுகின்றது. விரிவுரை நேரங்களாக அவை மாற்றப்பட்ட நிலையில் அவற்றை தவிர்த்தே இன்று முஸ்லிம் மாணவர்கள் ஜும்மாவுக்குச் செல்கின்றார்கள்.

பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பல்கலைக்கழக சமூகமும் இப்படைகுவிப்பால் பாரிய அச்சத்தை எதிர்கொண்டுள்ளனர். தன்னுடைய குழந்தைகள் குறித்தும், பெண் பிள்ளைகள் குறித்தும் தான் பயந்து வாழ்வதாக ஒரு குடியானவர் கவலை தெரிவிக்கின்றார்.

### அன்பார்ந்த நமது மக்களே..!

பல உள்நோக்கங்களுடனான இவ்வாக்கிரமிப்பை வெறுமனே பல்கலைக்கழக பாதுகாப்பென்று குறுக்கிவிடுவது மிகப்பெரிய முட்டாள்தனமும் பேரினவாதத்திற்கு சோரம்போகும் நிலையுமென்பதினை நாம் மறக்கலாகாது. இவ்வாறான கதைகளையே பேரினவாதத்தின் ஏஜென்டுகள் கட்டத் தொடங்கியுள்ளனர். இன்று பேரினவாதத்தினால் முன்னெடுக்கப்படும் சிங்களமயமாக்கத்தின் கொடூர மூன்று முகங்களில் நடுமுகம் இதுவாகும். மற்றைய இரண்டும் ஒலுவில் துறைமுகமும், ஆலிம் நகருமாகும். இவை குறித்து விரிவாகப் பேசுவதற்கு இப்பிரசுரம் போதுமானதல்ல.

கிழக்கின் பிரிப்புக்குப் பிறகும், கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பிறகும் அரசு வழங்கிய "சுதந்திர கிழக்கு" என்ற கோசங்களும் "துப்பாக்கிச் சத்தமற்ற உலகில் உங்கள் பிள்ளைகளை சந்தோசத்துடன் கல்வி பயில வைப்போம்" என்ற கௌரமிக்க ஜனாதிபதியின் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வாக்கும் வெறும் வாக்குறுதிகளே என்று புரிகின்றது. இந்நிலையில் நமது அரசியல் தலைமைகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். வாக்குவேட்டைக்காக நம்மை பகடையாக பயன்படுத்து கின்றவர்கள் நமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும், அவர்களது கல்வி நலன் குறித்தும் உரிய நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள முன்வர வேண்டுமென மக்களாகிய நாம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

பொதுமக்களாகிய நாம் இவ்விடயம் குறித்து சிந்திக்க வேண்டாமா?

நாம்தானே மிகப்பெரிய ஒலுவில் முஸ்லிம் தேசப் பிரகடனத்தின் பிரதிநிதிகளாக இருந்தோம். இப்போதும் நம் பிள்ளைகளின் சுதந்திரமான கல்விக்காகவும் அவர்களின் எதிர்காலத்திற்காகவும், முஸ்லிம்தேச சமூக நலனுக்காகவும் நமது திரட்சியான குரலை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கால கட்டத்திற்குள் வந்துள்ளோம்.

**தென்கிழக்குப் பல்கலைக்கழகமே நமது உயர் கல்வியின் மையம்**
**நமது பல்கலைக்கழகத்தினை நாமே காப்பாற்றுவோம்.**

**பல்கலைக்கழகத்தினதும், முஸ்லிம் சமூகத்தினதும் நலன் விரும்பும் சகோதரர்கள் தங்களுக்கு முடியுமான அளவு இப்பிரசுரத்தை பிரதி பண்ணி ஏனைய சகோதரர்களுக்கும் வழங்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

(முஸ்லிம்தேச அக்கறையாளர்கள் 02.10.2008